

மெட்ரோ ரெயிலில் இலவச பயணம்

# சுற்றுலா தலமாக மாறிய விமான நிலையம்

ஆலந்தூர், பிப்.14–

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வண்ணாரப்பேட்டை வரை புதிய வழித்தடத்தை தொடங்கியதால் கடந்த 4 நாட்களாக இலவச பயணத்திற்கு அனுமதி அளித்தது. இதனால் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமானோர் மெட்ரோ ரெயில் மூலமாக சென்னை விமானநிலைய மெட்ரோ ரெயில் நிலையத்திற்கு வந்தனர்.

பின்னர் அவர்கள், பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முனையங்களுக்கு இடையே கட்டுமானப்பணிகள் நடக்கும் பகுதிக்கு சென்று விமானம் தரை இறங்குவது, பறந்து செல்வது, விமானத்தில் பயணிகள் ஏறுவது போன்ற காட்சிகளை கண்டு களித்தனர். இதனால் சுற்றுலா தலம் போல விமான நிலையம் மாறியது.